ஓலை 38 | ஓசை 140 | மே 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்.**

ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு,
இறுதியில் தான் சாவதற்க்குக் காரணமானத் துயரத்தை உண்டாக்கிவிடும்.

**Translation:**

Alliance with the man you have not
proved and proved again,
In length of days will give you mortal pain.

**Explanation:**

The friendship contracted by him
who has not made
repeated inquiry will in the end
grieve (him) to death.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்

### அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பழமொன்ரியுக்கள்

1
கோழி திறந்து விட்டு,
குஞ்சுகள் பாவம் மட்டையாகின்றன.
குடி மக்களின் அரசு!

2
குருடருக்கு குருடர்,
வழி காட்டுகிறார்கள்
கல்லறைக்கு.




3
மது உள்ளே;
மதி வெளியே.
விதி ரோட்டில்.

4
கற்பூரம் விற்க காற்பணமே;
கள் விற்றால் கலப்பணம்.
விடுவார்களா கள்ள வியாபாரிகள்!

5
குடி குடியை மட்டுமா
நாட்டையே தள்ளாடவல்லவா.
இணைய விற்பனை

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி(மா)

# கேள்வி

(அதிகாரம் : 42)




ஒருவனுக்கு கேள்வியறிவென்பது
உயர்செல்வங்களுள் ஒன்றாம்.
அச்செல்வம் செல்வங்களிலெல்லாம்
முதன்மைச்செல்வம் என்றாகுமாம்.

கேள்வியெனும் மெய்யுணவு
செவிக்குக் கிட்டாநேரம்.
உடலை ஓம்பும்பொருட்டு
வயிற்றுக்கு உணவளித்தல்நலம்.

செவியுணவாம் கேள்வியை
விரும்பிப்பெறும் மாந்தர்.
நிலவுலகில் வாழ்ந்திடினுமவர்
அவியுணவின் தேவருக்கொப்பர்.

முயன்று நூல்கல்லாவிடினும்
கற்றோரிடம் கேட்டறிதல்வேண்டும்.
இஃதொருவன் வாழ்க்கையின்
தளர்ச்சியின்கால் ஊன்றுகோலாகும்.

ஒழுக்கச்சான்றோரின் சொற்கள்
வழுக்குச்சேற்றில் நடக்க.
வழிசெய்யும் ஊன்றுகோலாகி
வாழ்விற்கு உதவும்.

எத்தனை சிறிதாயினும்
நல்லவை அத்தனையும்.
கேட்டறிதல் இத்தனையளவேனும்
நிறைந்த பெருமைதரும்.

நுண்கல்வி அறிவோடு
கேள்வியறிவும் உடையோர்.
பிறழநேரினும் ஒருபோதும்
பேதமைச்சொற்கள் பேசார்.

கேட்டறிவால் துளைக்கப்பெறா
செவிமடல்கள் ஒருவனுக்கு.
ஒலியனைத்தும் கேட்டிடினும்
உண்மையிலது செவிட்டுச்செவிகளே.

நுட்பமுடைய கேள்வியறிவை
விருப்பமுடன் பெறாதோர்.
வணக்கமாகப்பேசும் வாயினர்
ஆகுதல் அருமையேயாகும்.

கேள்விச்சுவையை செவிவழியே
உணராது வெறுமனே.
நாவின்சுவையுடையோர் புவியில்
இறத்தலும் வாழ்தலுமொன்றே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# நிழல் பட நினைவுகள்

நினைவில் வாழும் மனிதர்களின் நிழற்படம்
வாழ்ந்த காலம் கண் முன்னே நிழலாடும்
அருகில் இல்லா வலிக்கு ஆறுதல்
தொலைந்து போன துயருக்கு தேறுதல்



கூடிக் களித்த நாட்கள்
சுற்றுலா சென்ற நினைவுகள்
திருமண காவியங்கள்
பள்ளிக்கூட பாஸ்போர்ட் புகைப்படங்கள்

கண்ணீர் சொறிந்த நாட்கள்
காதல் நினைவுச் சின்னங்கள்
குழந்தைகள்! செல்லப் பிராணிகள்!
விபத்துகள்! விநோதங்கள்! எல்லாம் மாறி
சலிப்படைய செய்யும் கிளிக்குகள்

அரிதாக இருப்பதே கலைப் படைப்பு
அளவுக்கு மீறினால் விலை போகாது
மாமங்கத்தில் பூப்பதாலேயே குறிஞ்சி
கால் வைக்கும் இடமெல்லாம் இருப்பின் நெருஞ்சி

ஒரே ஒரு தாஜ்மகால்
காத்திருக்குது காண  கோடி கண்
நீங்கள் லைலாவை மஜ்னுவின்
கண்களால் காண்க
ஓவியத்தை ரவிவர்மாவின் கைகளால் வரைக

காமிரா உள்ளவனெல்லாம் கலைஞன் அல்ல
கிறுக்கல் எல்லாம் கவிதை அல்ல
கிளிக்குகள் எல்லாம் காப்பியம் அல்ல
அகத்தின் அழகு படத்தில் தெரியும்!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# பாரியன்பன் நாகராஜன் - கவிதைகள்

ஒலியெழுப்பியபடி
சாலையில்
வேகமாய் விரைகிறது
வாகனம்.
விபத்திலிருந்து
என்னை மீட்க
சாலையின் ஓரமாய்
இழுத்துக் கொள்கிறேன்
என்னை நான்.

/



உனக்கான
காதல் கவிதை
முற்றுப் பெற்றுவிட்டது.
உனக்கு
எந்த வரி பிடித்திருக்கிறதோ
அந்த வரியில்
அமர்ந்து கொண்டு
உன் காதல் ராஜ்ஜியத்தை நடத்து.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

# யாதும் ஊரே



வான் உகுக்கும் அமிழ்தாம் மழைநீர்
தானாய் மண்ணில் புரண்டு ஓடும்.
அந் நீர் வழிச் செல்லும் ஓடம் போல்
நம் உயிர் நாம் செய் வினைவழி ஏகும்.
உயிர்கள் வாழும் ஊரெல்லாம் நம் ஊரே.
உலக உயிர்கள் அனைத்தும் நம் இனமே.
பிறப்புண்டேல் இறப்புண்டன்றோ?
பிறந்தால் மகிழ்வும் இறந்தால் துக்கமுமெதற்கு?

நான் என்ற அகந்தையை விடுத்து
நாமென்ற எண்ணமதைக் கொள்வோமே!
தீமையும் நன்மையும் நம்செயல் வழிவருமே!
நல்லதை எண்ணி அல்லதை விடுப்போம்.

ஆற்றில் செல்லும் ஓடம் போல் நம்வாழ்வு.
ஆசையில் அலைந்து அல்லலில் அழுந்தும்.
ஆன்றோர் பட்டறிவால் அறிந்து கூறியவை.
ஆராய்ந்தால் வாழ்க்கை அவரவர் வினை வழியே.

பேரறிவுடையவரைப் போற்றித் துதிக்கவும் வேண்டாம்.
சிற்றறிவுடையோரைத் தூற்றி இகழ்ந்திடவும் வேண்டாம்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# மரத்தின் சிறப்பு

அணுவுக்குள் இருக்கும் ஆற்றலைப் போல
சிறிய விதைக்குள் இருக்கும் மிகப் பெரிய பொக்கிஷம்
பசுமை மாறாமல் இருக்கும் மரத்தில்
பறவைகள் கூடு கட்டி வாழும்
இரவில் கீச் கீச்வென
சத்தம் மரத்தின் கீழ்
உறங்கும் மானுடனுக்கு
தாலாட்டாய் இருக்கும்
கட்டணம் இல்லா வீடு
பறவைகளின் உற்சாக கூடு
காற்றில் ஆடினாலும் கம்பீரமாய் தாங்கி நிற்கும்
ஆலமரம் குடை பிடித்து நிற்கிறது மானுடனைப்
பாதுகாக்கவும் செய்கிறது
ஆலமர விழுதில் தொங்கி
மழலைகள் ஊஞ்சல் ஆடுவது சிறப்பாகுமே
கோடி கொடுத்தாலும்
இந்த உற்சாகம் கிடைக்காதே
மரத்தின் பயன்கள்
தான் எத்தனை எத்தனை
அத்தனையும் போற்றி பாதுகாப்பது
மானுடனின் கடமை
இயற்கையான மரங்களை பாதுகாத்து
வளமுடன் நோய் நொடியில்லாமல் வாழ்வோம்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கிராமியக்கீதம்

## ஊரணியில் நீரெடுத்து ஊர்கோலம் போறபுள்ள

செம்மரக்கட்ட செலஒண்ணு செகப்பு சேலைகட்டிக்கிட்டு
ராமர்பச்ச ரவுக்கக்கட்டி ராக்கம்மா ராத்திக்கிட்டு
ஆயிரங்கால்சடை பின்னி அயிரமீனா ஆஞ்சுகிட்டு
சலங்க கொலுசுகட்டி சங்கையன உசுப்பிப்போறவளே!
தவலப்பானயத் தூக்கிகிட்டு தெக்கால ஊரணிக்கு
பச்சதண்ணி எடுக்குறேனு பச்சயா பொய்சொல்லி
தேவதயா போறவளுக்கு தவமாய் காத்திருக்கேனே!
ஊரணிக்கு கிழக்கால ஊருசனம் யாருமில்லே
ஆலமர நிழலிருக்கு இலந்தப்பழம் பழுத்திருக்கு
மாமன பசியாத்த புள்ளிமானா துள்ளிவாபுள்ளே!
பருத்திச்சொள கண்ணபாத்து பத்துலட்சம் பருவந்துருக்கு
அத்திபழ உதட்டாலசூடு ஆத்த வாபுள்ளே!



கவிஞர் ஶ்ரீவி.முத்துவேல்,சென்னை

# குங்கும பொட்டுக்காரி

கருவிழியில் மைப்பூசி
அன்பில் வலைவீசி
இதழ்வழி பொய்பேசி
இன்பத்தில் மெய்பேசி
காதல் வழி கதைபேசி
அனுதினமும் என்னை வாசி
துளி நேரமும் நேசி!
இவள் என் சிவந்த நெற்றி பொட்டுக்காரி.



கவிஞர் ச.இராஜ்குமார்

# கவிதை

முதல்வரே!

முதல் மாநிலமாக
முதல்வரும் எழுத்தாணிக்கு
முதல் முத்தத்துடன்
முதல் கையொப்பமிட்டு
முன்னேற்ற பாதைக்கு
முதல்அடிஎடுத்து வைத்தாரே!

பூவின் முத்தம்!

உரு தெரியா தென்றலும்
தெம்மாங்கு பாட்டிசைத்து
திசையெல்லாம் வீசிட்டு
முதல் முத்தம் கொடுத்து
முதிர்ந்த பூவையும் உதிரவைத்ததே!
உதிர்ந்த பூவதுவும் உடன்சென்று
பூமிதாயின் மடியில் மெத்தனமாய் பகிர்ந்தே!

மகனின் முதல் முத்தம்!



மசக்கையாயிருந்து
மாதம் பத்து சுமந்து
மின்மினி கண்களாய்
மீறிய வலியோடு
முதல் முத்தத்தை பெறவே
மூச்ச நின்று வந்தபின்
மெல்லிய பரிசமதில்
மேனியங்கும் சிலிர்த்திடவே
மையல் வாழ்க்கையிலே
மொட்டாய் மலர்ந்தாயே
மோகன புன்னகை அழுகையுடன்
மௌன ராகம் தாளம் போட வந்தவனே
ம்மா என்றழைக்கவே!


என்னவனே!
முதல் நாளிலேயே முழு பார்வையால்
முதல் முத்தமதை மொத்தமாய் மூழ்கடித்தவனே

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# சித்திரை நிறைமதி எழுப்பிய எண்ணம்

சித்திரை நிறைமதிநாளில் நிலவைக் கண்டுகளித்திட
சிறிது கடினப்பட்டு படிகளேறி மொட்டைமாடி
அடைந்து வானத்தைப் பார்த்தேன் ஆர்வத்தோடு;
அந்நேரம் வானில் இருந்த நிலவு
அழகாய்த் தெரியவில்லை அடியேனக்கு ஏனெனிலதை
கார்மேகம் மறைத்திருந்தது கண்ணுக்குத் தெரியாவண்ணம்!





புறநானூறு பாடல் 112.

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும்
பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம் குன்றும்
கொண்டார்யாம் எந்தையும் இலமே.

சித்ரா பௌர்ணமி திருநாள்தன்னில் புவிவாழ்வோர்
சந்திரனை வணங்கினால் நன்மை பயந்திடுமென
சொன்னப் பெரியோர் சொல்லாலே சுகப்படவே
சோம்பேறி நானும் மாடியேறி முயற்சித்தேனே!

சித்திரக் குப்தனை வணங்கிடும் நன்னாளிது;
செண்பகா நதிக்கு பூஜையிடும் நாளிது;
வரதராஜப் பெருமாள் ஸ்ரீராமானுஜ ருக்கருள
வந்திட்டநாளிது; கள்ளழகர் வையையிலிறங் கிடும்நாளிது!

வானவீதியில் நிலவை மறைத்த கார்மேகம்
வழிவிட்டது என்கண்களுக்கு நிலவைக் கண்டுகொள்ளென;
கண்டேன் நிறைமறியை எந்தன் கண்குளிர;
கண்ட அவ்வேளை என்நினைவுக்கு வந்தார்
சித்திரகுப்தன் தானேனெனில் பாவபுண்ணியகணக் கரென்பதாலொடு
நினைவுக்கு வந்தது ஒருபாட்டு என்றோபடித்தது!

தலைவியைப் பிரிந்த தலைவனை நினைத்து
தலைவிபுலம்பிப் பாடும்பாட்டு நினைவுக்கு வரவில்லை;
தலைவியைப் பிரிந்ததலைவன் புலம்பும்பாடலும் வரவில்லை!
நிலையற்ற வாழ்க்கையைப் பற்றிசொல்லிடும் புறப்பாட்டது;
முல்லைக்குத் தேரைத்தந்ததால் முடிவில்லா புகழ்பெற்று
மூவேந்தரையும் தன்னின்னுயிர் பரிசளிப்பால் வறியராக்கி
வான்வாழ்வு வாழச்சென்ற பாரியின்மகளிர் பாசமிகுதம்
வாழ்வாதாரமாம் பாரியைநினைத்து நிறைமதிநாள் ஒன்றில்
பாடிய "அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின்" நினைவுக்குவர
பாவக்கணக்கை சரிபார்த்தாரா சித்திரகுப்தர் என்றெண்ணினேன்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# முடிவிலி

சிற்றின்பத்தின் மேலெழும் ஆசை
மதிமயங்கி போதை கொள்ளும்!
முடிவில்லா இன்பம் தரும்
கூடவே அல்லலும் தரும்!
அண்டத்தில் சிறிய துகளான
மனிதன் அதை உணர்ந்து
முடிவிலியின் பாதம் பற்ற
மனம் மகிழ்ந்து
தன்னை உணர்ந்து
ஆன்மாவை மிளிரச் செய்யும்
பேரின்பம் நம்மை நாடும்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# நறுமணம்

இருளின் சுவையறிந்த விடியல்பொழுதில்
ஓய்ந்திடும் பனிபுகையின்
குளுமையில்
ஆள் நடமாட்டம்
தொடங்கிடும்முன்
அழுக்கு மூட்டையோடு
வீதியோரம் படுத்துறங்கும்
யாசகன்



பின்னால்
தொடர்ந்து துரத்தி
ஓயாமல் குறைத்திடும்
தெருநாய்கள்

கருப்புச்சாலையின்
இருபக்கமும்
மஞ்சள் நிறப்பூக்களைத் தூவி
வழியனுப்பும் சரக்கொன்றை
இன்னும் அணையாது
வெளிச்சத்தில் கண்காணித்திடும்
மின்விளக்குகளென

ஒவ்வொன்றையும் கடந்து
ஒற்றை மனிதனாய்
நமக்கான தேடலை
பூக்களின் ஒவ்வொரு துளி நறுமணத்தோடு
அதே வீதியில் சேகரிக்கும் குப்பைகளோடு
தேடுகிறேன்.

கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்,கிணத்துக்கடவு

# நிறைவான வாழ்க்கை

சிலரது வாழ்க்கை பாதையோர போர்வைக்குள்
சிலரது வாழ்க்கை குடிசையின் தாழ்வாரத்தில்
சிலரது வாழ்க்கை சாதாரண வீட்டின் திண்ணையில்
சிலரது வாழ்க்கை அரண்மனை வீடுகளில்
ஆனால் அனைவரும் வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறார்கள்
வாழ்க்கைப் பாதையில் வாழ வைக்க
அன்பான உறவுகள் இருந்தாலே போதும்
நாம் மனதளவில் எசமானர்களாகிறோம்
உண்மையான பாசம் தகுதிக்கு அர்த்தம் தேடுவது கிடையாது
தேட வேண்டியது, சேமிக்க வேண்டியது காசு பணத்தை அல்ல
நம்பிக்கை நிறைந்த உண்மையான உறவுகளை மட்டும் தான்
நிறைவான வாழ்க்கை எங்கும் கிடையாது
நிரந்தரமான உறவுகள் அருகில் இருப்பதை விட



கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம,(அனுராதபுரம்)

# நொந்த மனம்

கிள்ளியெறிந்த
தாத்தாப்பூவின்
முகம் பார்த்தேன்.
மனம் என்னவோ
சுண்டிப் போயித்தானிருந்தது.



கவிஞர் இராஜேஷ் சங்கரப்பிள்ளை

# நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்

புரிதலில் இணையும்
புனிதமே இல்லறம்

இல்வாழ்க்கை இன்பமாய்
இவ்வுலகில் இனித்திட

மனம் சார்ந்த
மகிழ்ச்சியினை பகிர்ந்தே

உள்ளம் திறந்தே
உறவாடும் உன்னதங்களில்

உருவெடுக்கும் குடும்பம்
பல்கலைக் கழகமே



அகர முதல

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# குழந்தை பருவம்!

துன்பங்களை மறந்து
இன்பமாய் வாழும் பருவம்
அம்மா மடியில் ஆசையாய்
துயில் பயிலும் பருவம்
பட்டாம்பூச்சியாய் வானில்
சிறகடிக்கும் பருவம்
விண்மீனாய் பாரினில்
ஒளி வீசும் பருவம்
வண்டுகளை கவரும் பூக்களாய்
மணம் வீசும் பருவம்
பாவைகளோடு கொஞ்சும்
பிஞ்சுப் பருவம்
இதுவே குழந்தை பருவம்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# இயற்கையின் விந்தை

தன்னைத்தானே சுற்றிடும் புவியும்
புவியுடன் இணைந்த கோள்களும்
நில்லாது நகர்ந்திடும் மேகமும்
வான மகளுடன் இணைந்த விந்தை தானே!

காலையில் உற்சாகமாய் உதித்திடும் கதிரவன்
அந்தியில் மறைந்து
ஓய்வெடுக்கச் சென்றிடும் விந்தைதான் என்னவோ!
ஒரு திங்களுக்குள் தேய்ந்தும் மறைந்தும் போகும்
முழுமதியின் விந்தைதான் என்னே!

இரவெல்லாம் பொழிந்திடும் பனித்துளி
ஆதவன் சிரித்ததும் மாயமாகும் விந்தைதான் என்னவோ!
வானிலிருந்து பொழிகின்ற மாரியும் படபடக்கிற இடியும்
கண் கூசிப் போகும் ஒளியும்
இயற்கையின் விந்தை என்றால் மிகையில்லையே!



தானே வளர்ந்திடும் செடிகளும்
உதவியின்றி மலர்ந்திடும் மலர்களும்
இயற்கையின் விந்தைதானே!
கண்கவர் அருவிகளும் பன்னீராய் தெளித்திடும்
அருவியின் நீரும் இயற்கையின் விந்தைதானே!

கருவினிலிருந்து வெளியேறிய சிசுவின் கதறல்
அன்னையின் அணைப்பினில் அமைதியாகும்
விந்தை தான் என்னவோ!

புலரும் பொழுதில் ரீங்காரமாய் கானம் இசைத்திடும் குயிலும்
குருவிகளும் பச்சைப் பட்டாடை உடுத்தி
அழகாய் காட்சி அளித்திடும் சோலைகளும்
இயற்கையின் விந்தையே!

சிறு கூட்டினுள் உருவாகிடும் பட்டுப்புழுவும்
மனதைக் கவரும் வண்ணத்துப் பூச்சியாக மாறிடும்
விந்தைதான் என்னவோ!

மலர்களில் எடுத்து வந்து கட்டிடும் கூட்டினிலே
தேனும் அருமருந்தாய் போன விந்தைதான் என்னவோ!
பல நூறான இயற்கை அன்னையின் விந்தைகளை
ஆவலுடனே கடந்து செல்கிறோம் நிதமும் நாமுமே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# நெஞ்சாங்குழியில் கிறுக்கி



என் என்றென்றும்
அவள் நெஞ்சாங்குழி நீங்காமல்
அழியாத சுவடுகளில்
தெரியாமல் அழிந்து போன என்
முதல் காதல்தான்!

யாரோ அவள்
யாரோ நான்
அல்ல ?
காலத்தால்
அறிந்தும்,புரிந்தும்,பிரிந்து,
போன காதல் நெஞ்சாங்குழி.

சிந்தித்த வயதில் காதலும் சிந்தை ஆனது
பல விந்தைகளாக பல நாட்கள் தொடரில்,
தொடராமல்
வாழ்க்கையில் பல மாறுதல்கள்
காதலில் கயவன் ஆனதால்

அன்று இருளிலும் கண் விழித்தது
இன்று பகலில் கண் விழிக்க முடியாமல்
ஏமாற்றப்படுவேன் என்று தெரியாமல்
பொய்யும் உண்மை என இன்று ஊமை ஆகினேன்.

சாதிப்பதை அழித்து
சாக்கடையும் சாதி பார்த்தது
காதல் என்ற மாயையைக் காட்டி.

குச்சி உடம்பைக் கொண்டு உருவமில்லாமல் ஆக்கிவிட்டாள்
பாதகி பாதையை தேட
உடும்பு உடம்பு கிறுக்கு பிடித்தது
விபத்தில் அடையாளம் அறியாமல்
நல்லவர்களை சோதிப்பதுதானே ஆண்டவன் விளையாட்டு
பலரை காலத்திலும் காதலிலும் கலங்கடித்து!

அன்று
லட்சியமும் அலட்சியமானது
இன்று வாழ்க்கையே முடிவற்ற அரங்கமானது

அவசர தேடலில் காதலும் அன்று தேடப்பட்டது
சேதப்பட்ட பின்புதான் தேதி பட்டது
மீண்டும் அவளை தேடாதே என் நெஞ்சாங்குழி!

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# உண்மை சுடும்

உண்மை உண்மையில்
புதைந்து கிடக்கலாம்
உண்மை மண்ணடியில்
உறங்கிக் கிடக்கலாம்
ஆனாலும் அது
ஒளிந்த நிஜத்தின் நிழல்
விழித்துக் கனலும் தழல்
அதன் வெப்பம் கனிந்து
வெளிப்பட்டே தீரும்
சாம்பலடியில் அது
சாபமாய்க் காத்திருக்கும்
மாயத்துணியால் மூடப்பட்டிருந்தாலும்
சுடராய்த் துளைத்து மேலெழும்
பொய்களைச் சுட்டெரித்துப் பொங்கும்
உண்மை பேசாது
மௌனிக்கும் ஊமையல்ல
பிறழ்ச்சி அடைந்த பிழையுமல்ல
சாட்சிகள் இல்லையென்று
போலி நாடகங்கள்
போதனை செய்யலாம்
மனசாட்சியும் இறைசாட்சியும்
உள்ளவரை ஊழலுக்குச் சாவுமணிதான்
சமாதி ஊர்வலம்தான்
உண்மை
காலம் கடந்தாலும்
காலம் முடிந்தாலும்
வெளிப்பட்டே தீரும்
காரணகாரியங்கள் உடைத்து
கரிய இருள் துடைத்துக்
கதிரொளியாய் ஒருநாள்
காசினியில் புலரும்
உண்மை நெடுநாள் உறங்காது
உண்மை சுடாமல் அணையாது



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# தமிழ் வெல்லம் உண்ட தமிழ் வெள்ளம்

கணவாய்களில் தமிழ்த் தாகம் தீர்த்தபின்
உணவாய் மோகஞ் சூழ்ந்த தமிழ் கண்
தமிழுண்ட இடையில் முத்தம் துஞ்சும்
அமிழ்துண்ட மடைக்கதவில் தமிழ் வெள்ளம் விஞ்சும்.




கவிஞர் மதீரா,இலங்கை

# முண்டாசுக் கவிஞன்


அச்சத்தை அகற்றிட
அறிவாயிரம் சொல்லி
அகிலத்தைத் தன்
அழகுத் தமிழால்
அரசாண்ட தமிழன்
முண்டாசுக் கவிஞன்

மொழிக்கு அழியாப்
பெருமை சேர்த்து
பனித்துளிகளாய்க் கவி
மழை பொழிந்து
உடலையும் உள்ளத்தையும்
சிலிர்க்க வைத்தவர்

எட்டயபுரத்தின் எழிலரசன்
எழுதியவைகள் எல்லாம்
ஏழேழு ஜென்மம்
எடுத்து நின்றாலும்
எள்ளளவும் திகட்டாத
இன்பக் கனிகள்

அடுப்பூதும் பெண்களை
படிக்க உரமூட்டி
தடுக்கிடாமல் மண்ணில்
பேரெடுத்து வாழ
உள்ளத்துக்கு உயிரூட்டிய
உன்னதத் தலைவன்

முத்தமிழ் வித்தகன்
செந்தமிழ் அர்ச்சகனாய்
காலத்தால் அழியாத
கவிகளை ஈந்தே
கனவிலும் நனவிலும்
சிந்தனையைச் செதுக்குபவன்



மண்ணிலே மறைந்தாலும்
விண்ணிலே உலாவிடும்
காக்கைச் சிறகும்
நந்தலாலாவும்
காதினில் ஒலித்தே
(இ)ராகம் பாடிடும்

ஓடி விளையாடு பாப்பா நீ
சோம்பேறியாய்
ஓய்ந்திருக்காதே என்று
ஊக்கம் கொடுத்து
தட்டிக் கொடுத்த
செந்தமிழின் மணம் கமழும் செம்மல்

தரணியில் தலைநிமிர்ந்து
தடம்பதித்த தலைவனே
பாட்டுக்கொரு தலைவன்
நின் புகழ்
உலகம் உள்ளவரை
ஒளிவீசிப் பிரகாசிக்கும்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# நலம் விசாரிப்பு

எப்படி இருக்கின்றாய்?
என்று கேளுங்கள்.
அதற்கு பதில் என்னிடம் உண்டு.

எப்படி இருக்க போகின்றாய் ?
என்றோ
எப்படி சமாளிக்கப் போகின்றாய்?
என்றோ
எப்படி வாழ்ந்து விட போகின்றாய்? என்றோ

இப்படியே இருந்து விடப்போகின்றாயா?
என்றோ

இப்படி உந்தன் கேள்விக் கணைகளால்
என்னை சரமாரியாக தாக்குகின்றாயா?

இதற்கு என்னிடம் உள்ள பதில்
மௌனம் மட்டும்தான்.



உந்தன் அக்கறை கலந்த அன்பிற்கு
எந்தன் அன்பையும் தருகின்றேன்.
சேர்த்து வைத்துக் கொள்.

இனியொரு முறை இக்கேள்விகளுக்கு
பதில் தேடி வந்தால் நான் தர தேவையில்லை
நீயே அறிந்தும் புரிந்தும் கொள்வாய்.

இறுதியாய்,
நலம் அறிய ஆவல் என்றால்
நலத்தை மட்டும் விசாரித்து
விட்டு போ.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# கடவுளின் பிரதிநிதி

அன்பின் கதிர்கள் பெருகட்டும்
கருணைக் காசுகள் பொழியட்டும்
நேச நட்சத்திரங்கள் ஜொலிக்கட்டும்
பாசத் தருணங்கள் விளையட்டும்
அறிவுச் சூரியன்கள் உதிக்கட்டும்
ஆனந்த முகில்கள் வீழட்டும்
புன்னகை தீபங்கள் சுடர் விடட்டும்
வானச் சிறகுகள் விரியட்டும்
எண்ண ஊற்றுகள் பொங்கட்டும்
இன்பத்தாலாட்டு எங்கும் வீசட்டும்
உறவுப் பாலங்கள் நீளட்டும்
நம்பிக்கை மலர்கள் விரியட்டும்
வெற்றிப் பயணங்கள் தொடரட்டும்
புகழ்த் தோரணங்கள் பூக்கட்டும்
வாழ்க்கை இப்படி மாறட்டும் என்றேன்
வரம் தருவதாய் வாக்குத் தந்தான் கடவுள்
தாய்மையைக் காட்டி எல்லாம் சுபம் என்று
அருளிப் போனான் அந்தக் கடவுள்.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# நவீன உலகம்

பழமை மறந்து புதுமை படைத்தது
பண்டைய உலகம் பறக்கத் தொடங்கியது
பல கஷ்டம் மாறத் தொடங்கியது
பலவகையும் இழக்கத் தொடங்கி விட்டது

பெரியவர்களின் மதிப்பு சுக்கு நூறாகியது
பெரும் விவசாயமும் துச்சமாகிப் போனது
பெரும் செயல்கள் சிறிதாகி போனது
பெயர் அறியாதவர்களும் அறிமுகமாகி போனர்

மதியுகத்தால் மதுயுகம் விளையாடத் தொடங்கியதடா
மனிதனிடம் மனிதாபிமானம் தேட வேண்டிய நிலையடா
மரணமும் இளமையில் வந்து சேருதடா
மரங்கள் வெட்டப்பட்டு கட்டிடமாக எழுந்ததடா



ஒற்றுமையான கூட்டு குடும்பமும் சரிந்ததடா
ஒருமை என்று தனியாக மாறியதடா
ஒன்றாக உண்டது காய்ந்து போனதடா
ஒருத்தரையும் அழையாத தட்டுகள் ஆனதடா

அம்மியில் அரைத்த மணக்கும் உணவுகளோ
அழுக்குப் பெட்டியில் அறுவது தடவையாகியதடா
அன்புடன் சமைத்த உணவுகள் மங்கியே
அடுத்தவன் கடையில் சமைத்து உணவாகியதடா

கையால் செய்த வேலைகள் யாவுமே
கை இயந்திரமாய் மாறிப் போனதே
கைகுள் உலகம் வந்து அடங்கியதோ
கை பேசியில் வாழ்க்கை தொலைந்ததோ

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# தமிழ் வழி நடத்துகிறது

சிந்தனை முடங்கிய நாளில்
நிந்தனை அம்புகள் சூழந்தது

பொழுது விடிந்தும் விடியாமல் இருந்தது
நோக்கமற்ற திரிந்த நாள்களில்

மாற்றத்தை விரும்பி பயணித்த வழியெங்கும்
மறுப்புமொழி விடையாக இருந்தது

சோர்ந்து நிற்கும் பொழுதுகளில்
குறள் மொழி  நெறிபடுத்தியது

வாழ்வின் உச்சம் தொட ஆற்றுப்படுத்தியது

தமிழ் எம்மை நெறிப்படுத்தியது
தமிழ் எம்மை வாழ வைக்கிறது.




கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# கடைசி இருக்கை


கல்விக் கூடத்தின்
கடைசி இருக்கை
சிலரை விட்டு
கல்வி விலகியிருக்கும்
சிலருக்கு கல்வியில்
உச்சம் தொடும்
உத்வேகம் அளித்திருக்கும்

பேருந்தின் கடைசி இருக்கை
சிலரை பாதி வழியில்
இறங்கி ஓட வைத்திருக்கும்
சிலருக்கு எதையும் எதிர்கொள்ளும்
பாடம் அளித்திருக்கும்

திரைக்கூடத்தின் கடைசி இருக்கை
சிலரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும்
சிலருக்கு பார்வை குறைபாட்டின்
அளவை உணர்த்தியிருக்கும்

கோயிலின் கடைசி இருக்கை
சிலரை உருகி கண்ணீர் சிந்த
அனுமதித்திருக்கும்
சிலருக்கு கடவுளின்
கருவறையை மறைத்திருக்கும்

முயற்சியின் அருகில்
இருப்போருக்கு
ஒரு பொருட்டே அல்ல
கடைசி இருக்கை.



கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# வேண்டுதல்

சிலை கழுவிய நீருடன்
சிறு நம்பிக்கையும்
இடம்பெயர்கிறது
வாய்ப்பிழந்த யாழியின் கக்குதழில்
சொட்டு சொட்டாகியது வரத்தின் ஈரம்.

ஆயிரம் கால் தாங்கிய
மண்டபம் முழுவதும்
உள்ளங்கை நீரம்பிய
திருநீறுகளின் அபிஷேகம்.

வெளியே சென்றவரை
கடந்து உள்ளே நுழைகிறான்
ஒருவனிடம் இல்லாத்தை
அவனுக்கு முன்னே கொடுத்துவிட்டார்
கடவுள்
அவன் இன்றும் காத்திருக்கிறேன்
இன்னொருவரின் வருகைக்காக.

ஒருவர் முகத்தை ஒருவர்
பாராமல் திரும்பி கொண்டிருக்கும்
நவக்கிரகங்களின் பலனில்
தான் ஒற்றுமையாக
வாழ்கிறார்களாம் தம்பதிகள்.

யாரோ ஒரு தலைமுறை
கொடுப்பதைப் பற்றிப் பேசுகிறது
செம்பருத்தி செடியிலிருந்து
முற்றும் பெறும்
இறுதி தலைமுறை



கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# கடிதம்

அன்புள்ளம் கொண்ட வார்த்தை
அடுத்த தலைமுறைக்கு தெரியாமலே
போயிருக்கும் கடிதத்தின் வாயிலாக
நாம் பரிமாறிய எண்ணங்கள்
கடந்து செல்லத்தான் வேண்டியிருக்கிறது
நவீன காலத்தில் மாற்றத்தோடு
பழையவற்றைக் கடந்து புதியவற்றிற்கு
அன்றெல்லாம் தூரத்தில் இருக்கும்
பிள்ளைகளும் பெற்றோர்களும் மற்றும்
உறவினர்களும் நண்பர்களும் மாறிமாறி
கடிதத்தின் வாயிலாக நலமறிந்தோம்
நேரில் பேசுவதைப் போலவே
தபாலோ, தபால்பணமோ, கொண்டுவரும்
அஞ்சல்காரரை ஆவலோடு வரவேற்போம்
திண்ணையில் அமரச்செய்து மோர்
கொடுப்போம் வெயிலின் இளைப்பாற
தந்தி வந்தால் மட்டும்
தடுமாற்றமாகிவிடும் என்னானதோ என்று
கடிதத்தினை வாசித்து காத்திருந்த
அன்பை காணும் பொழுது
கட்டி வாரியணைத்த காலங்கள்
வரலாறுகள் ஆகிவிட்டது நிகழ்காலத்தில்
மாயைகளால் உருவான மாற்றங்களினால்



கவிஞர் ம.இராஜசேகர் ஆக்கூர் மடப்புரம்

# புன்னகை பூக்கள்

எழுத நினைத்தேன் கவியொன்று
எண்ணங்கள் ஏதும் தோன்றவில்லை
சிந்தித்தேன்
மிளிர்ந்தன நினைவுப் பூக்கள் விண்மீன்களாய்
அகவை வாழ்த்துக் கூறியதில் ஆனந்தக் களிப்பு
அதன் பதிலுரை பூரித்தது மனம்
தொடர்ந்தன சில வார்த்தைகள் இன்னும் ஓர் மகிழ்ச்சி
நன்றிகளும் மகிழ்வுகளும்
இவையெல்லாம் புன்னகை பூக்கள்
என்றும் நினைவுகளில்.




கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு மாவட்டம்

# அவளைப் பார்த்த பின்

காதல்! கடவுள்! நம்பிக்கை!
கடவுளைப் பழிக்கும்
நாத்திகன் போல்
காதலைப் பழித்தேன்

கண்கள் பேசுமாம்
கால்கள் பறக்குமாம்
இதயங்கள் இடம் மாறுமாம்
இரவுகள் நீளுமாம்
ம்ம்
எத்தனை எத்தனை
(மூட)நம்பிக்கைகள்
அத்தனை அத்தனையும்
அனுபவித்தே தீர்ந்தேன்

அவளைப் பார்த்த பின்!



கவிஞர் ந.க.மணி,கிளியனூர்

# விரல் தீட்டும் தூரிகை

ஓர் மேடையோரம்
சிறு துகளாய்
பார்வை விரிந்தாடும்
மெய்மறந்த சில வரிகளில்

பலவித தாகம்
தேடலின் தூரம் பெருகிடும்
சில்லென்ற காற்றின்
துணையோடு

எத்தனை ஆசைகள்
கனவிலாடி போகுது
கற்பனை பையோ
நிறைந்த வழியும் வாசம்

விரல்தீட்டும்
தூரிகையில்
காகிதத்தின் பளபளப்பு



எண்ணக்குவியல்
எத்துனை விதங்கள்
கருத்துகள் மாறுபட்டு
மணக்கையில்

வியப்பின் எல்லை
விரிந்தாடி மகிழும்
மனமுற்றம் நிறைதேடி
நிற்காது ஓடும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி,நாகை மாவட்டம்

# சிரிப்பு

ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம்
சிரிப்பில் தான் எத்தனை வகைகள்
ஏகாந்த சிரிப்பு, நமுட்டு சிரிப்பு
ஆணவ சிரிப்பு ,அகங்கார சிரிப்பு
ஏளன சிரிப்பு ,புன் சிரிப்பு,
ஆனந்தத்தின் மகிழ்ச்சி சிரிப்பு
மனிதனுக்கு மட்டும் தானே,
சிரிக்கவும் ,சிந்திக்கவும் ஒரு
வரப்பிரசாதமாகவே சிரிப்பை
கடவுள் கொடுத்திருக்கிறான்.
சிலரை பார்க்கும்போது,
எப்போதும் சிரித்த முகத்துடனே இருப்பது
ஆரோக்கியத்தின் அஸ்திவாரமே,
சிரிப்பு தான்  என்கின்றனர் பலர்.
கள்ளமில்லா சிரிப்பு மழலையின்
சிரிப்புத்தானே ! தெய்வீக சிரிப்பும் தானே!
ஒரு ஏழைக்கு நாம் உதவிடும்
போது அவன் முகத்தில்
ஏற்படும் ஆனந்த சிரிப்பு
சொல்லி மாளாது தானே!
கன்னங்கள் குழி விழ
சிரிக்கும் சிரிப்பு பார்க்க
பரவசமாகுமே!
கல ,கல வென்று சிரிக்கும்
பலரை ஏமாற்றுக்காரன் சிரிப்பு
என்பார்கள்.
பெண்கள் சிரித்தால் தானே
உலகம் சிறக்கும்.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# மிச்சம் தேடி

தயங்கித் தயங்கி
தடங்கலூடே.
தெறித்த கண்ணாடித்
துண்டுக்குள்
கலைந்த பேச்சை
அடுக்கி வைத்தே.
அரைநாள்
அசதியில் கழிந்தது.

மறைத்து வைத்த மிச்சம்
எங்கே வென தேடியே
பொன்மாலையும்
நீள்கிறது.



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# மிகை

நீ(ல)ள வானம்
நெடுங்கடலென
கற்பனைக்கு எட்டியதை
காகிதத்தில் வடித்து வரும்
மகனுக்கு முத்தமிட்டால்
மனைவியாகிவிடுகிறான்



உவர்ப்போ
துவர்ப்போ
கூடியோ
குறைத்தோ இருப்பின்
சமையல் அருமையென
உச்சி முகர்ந்தால்
மனைவி
குழந்தையாகிவிடுகிறாள்

பெரும் கவிகள்
உங்கள் வரிகள்
பிரமாதமென்றால்
நானும்
அவர்களாகிவிடுகிறேன்

எல்லாம்
மிகையெனினும்

மிகையென்ன
மிகை

மிகையென்பது
வலிகளுக்கான
மயிலறகு

இறுதி நொடி வரை
எவர் மீதாவது
மிகையாக
பூக்களை தூவியபடியே
இருக்கட்டும் மனம்

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை


# காணவில்லை

திறந்த கதவுகளின்
திண்ணைகள்
சுமந்த
வயதானவர்களை
காணவில்லை

சிமினி
விளக்கால்
ஞானம் பெற்ற
புத்தகங்களை
காணவில்லை

அலங்கார
கல்லறைகளுக்குள்
புதைந்து போன
மண் தரைகளை
காணவில்லை

பொதுவெளி
மரங்களில்
ஊஞ்சல்களை
காணவில்லை



பழங்களை
குறி வைக்கும்
உண்டி கோல்களை
காணவில்லை

இதமான
வெயிலின்
ஈரச்சிறகுகளை
காணவில்லை

சிட்டுக்குருவிகளை
தொலைத்துவிட்டு
வீட்டு குருவிகள்
சிறை இருக்கின்றன

வானம் கொடுத்த
தொழில்நுட்ப வளர்ச்சி
சிறகுகள் பறித்தது
திசைகள் தொலைத்தது.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# நாழிகை தொலைத்த நாண்கள்



எங்கே சென்றாலும்
ஒருநாள் என்னை தேடிய வருவாய்
அங்கு நான் உனக்காக காத்திருப்பேன்
நான் மன்னித்தாலும்
என் ஜீவன் மட்டும் மரணிக்காமல்
உனக்காக பூத்திருக்கும்.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# மாயக் கண்ணாடி

நரை விழுந்த கிழவன்
தன் சிகை அலங்காரத்தை
மாயக் கண்ணாடியில் கண்டு வியக்கிறார்.
ஆஹா,
எத்தனை அழகு என்று!



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# வெறுமையை உணரும் பாவை இவளோ

உனக்காக துடிக்கிறேன்
நாடகம் என்றாய்
கண்ணீர் வழிந்தன
சிறந்த நடிப்பு என்றாய்.

சில கணம் சிந்தனையிலே
ஆழ நிம்மதியை குழைப்பவள் என்றாய்
புன்முறுவலோடு கதைக்க ஆசை என்றேன்
தொல்லை செய்யாதே என்றாய்.



எனக்காக சிந்தி என்றேன்
வேறு நிறைய பணி உள்ளதென்றாய்
அக்கறையாய் பேசிட நான் முனைந்தேன்
வெறுத்திட்டேன் என்று விலகினாய்.

விலகியே அலைகிறேன்
விசித்திர பிறவியாய் நின் பார்வையில்
விழியிலே வெறுக்கப்பட்டவளாய்
நீ பார்த்த கணமே புதைந்தேன்.

அடி ஆழத்திலே
மண்ணோடு மண்ணாய்.
நீ அழைத்தால் இந்த நொடியும்
எங்கு வேண்டுமானாலும் நான் தொடர்வேன்
நின் பாதங்களையும்.
நின் வார்த்தைகளையும்

உரிமை காதலோடு
வெறுமையாய் ஆன இவளை
வெறுத்த பார்வையில் மட்டும்
சுவைக்காதே இவள் விழி நீரை.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கோட்புலி நாயனார்

சோழவள நாட்டிலுள்ள நாட்டியத்தான் குடியினிலே
தோன்றினாரே கோட்புலியும் வேளாண்மை மரபினிலே
வீழாத மறவத்தால் கோட்புலியே தளபதியே
வேங்கையென இவர்பாயும் விரைவுனாலே வந்தபெயர்
ஆழிபோல ஆர்ப்பரித்தே அடக்கிடுவார் எதிரிகளை
அரசிற்கு போரினிலே அள்ளிடுவார் வெற்றிகளை
வாழி வாழி யென்றுதானே வழங்கிடுவார் அரசனுமே
வளங்களாக பொற்குவியல் வாளதுவும் பெற்றிடுமே

ஈட்டுகின்ற செல்வத்தை ஈசனுக்கே தந்திடுவார்
இறைபணிக்கு நல்லமுதும் இணையில்லா செய்திடுவார்
கோட்புலியும் மாற்றிடுவார் கொண்டநல்ல பொன்களையும்
குவித்திடுவார் நெற்கோட்டை கொடுத்துதவ அடியார்க்கே
வாட்போரின் வழிவந்த வளங்களெல்லாம் இறைவனுக்கே
வகுத்திட்டார் கோட்புலியும் வகையாக தன்வீட்டில்
நாட்களுமே வந்ததுவே தன்கடமை ஆற்றிடவே
நல்லோர்கள் அழைத்தேதான் நயமுடனே கூறிட்டார்




எந்தவொரு நிலையினிலும் நெற்கோட்டை நமக்கல்ல
இறைபணிக்கும் அடியார்க்கும் திருவமுது செய்திடவே
சொந்தங்கள் அனைவருக்கும் சொல்லித்தான் சென்றாரே
தூயவுள்ளம் கொண்டவரும் போர்முனைக்குச் சென்றாரே
வந்ததுவே பஞ்சமதும் வானமதும் பொய்த்ததனால்
வயிற்றுக்கு உணவின்றி வாடுவதா நெல்லிருக்க
சொந்தங்கள் மீறினரே சொன்னசொல்லை மறந்தேதான்
சுகமாக உண்டனரே சொக்கனவன் சொத்ததையும்

வெற்றியோடு திரும்பியவன் இழிச்செயலை அறிந்தானே
வெட்டிவிட முடிவெடுத்தே விருந்திற்கு அழைத்தானே
பற்றுள்ள அனைவருமே பாய்ந்தேதான் வந்தனரே
பார்வையாலே கோட்டையினை தாளிடவும் சொன்னானே
உற்றவர்கள் உறவினர்கள் உயிரெடுத்தான் வாள்வீசி
உயிர்பிழைத்த ஒர்குழந்தை உண்ணவில்லை உணவென்றான்
சற்றேனும் இரக்கத்தை காவலனும் யாசித்தான்
தவறிழைத்த இவன்தாயின் முலைப்பாலைக் குடித்ததனால்

இறக்கட்டும் என்றுசொல்லி எறிந்திட்டான் இருதுண்டாய்
இறைவனவன் அந்நொடியில் உமையுடனே காட்சிதந்தான்
கறையில்லா இவண்தொண்டில் கரைந்திட்டான் ஈசனவன்
கனிவுடனே இறந்தவர்க்கும் காட்டிட்டான் நல்வழியும்
நிறைமனத்தாய் கோட்புலியை நின்பாதம் ஏற்றிட்டான்
நீடூழி இவன்புகழும் நிலைக்கட்டும் என்றுரைத்தான்
மறைசொல்லும் தத்துவத்தை இவன்வாழ்வும் சொல்லிடுதே
மகேசனவன் பொருளெதையும் மனதளவும் நினைக்காதே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# உத்தம நட்பு

ஆபத்தில் உதவும்
அன்பான நட்பு

தனிமையின் தவிப்புகளில்
தடவிக் கொடுக்கும்

கைவிடப் படும்போது
கை கொடுத்துதவும்

தன்னலம் மறந்து
உன்னலம் காக்கும்

விருப்பு வெறுப்புகளையும்
நட்புக்கும் தியாகிக்கும்

தாயின் பாசம்
தருணங்களில் தெரியும்

உன் வலிகள்
தானும் உணரும்

உதிரத்து உறவுகளையும்
மறக்கச் செய்யும்

உடன் பிறந்தவன்
உனைத் தொடரும்

நீண்ட பயணங்களில்
நிழலெனத் தொடரும்

அதுவல்லோ அழகிய நட்பு



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# எல்லீஸ் ஆர் டங்கன்

அமெரிக்கா ஓஹியோவின் பார்ட்டன்நகர் தோன்றிட்டார்!
பத்தொன்பது நூற்றினது ஒன்பதினில் மேதிங்கள்
பதினொன்றாம் நாளதுதான் அன்னவரின் பிறப்பாகும்!
கற்குங்கால் புகைப்படக்கலை ஆர்வந்தான் மிக்கவரே!
கலிபோர்னியா பல்கலையில் திரைக்கதையும் இயக்கமதும்
படத்தொகுப்பும் தயாரிப்பும் நிர்வாகம் என்பவற்றுள்
தேர்ந்தாரே! உடன்பயின்றார் இந்தியராம் மாணிக்லால்
டாண்டன்பேர் உற்றவரே! படிப்பங்கு முடித்தபின்னர்
இந்தியாவைச் சேர்ந்தனரே! இணைந்திருவர் " நந்தனார்" படம்
இயக்கினரே! அதன்பின்னே " ஸதிலீலாவதி" படத்தாலே
திரையுலகில் அறிமுகத்தைப் பெற்றனரே! இவராலே
அறிமுகமது பெற்றவரே எம் எஸ் ஸுப் புலட்சுமியும்
எம் ஜி ஆரும் எம் கே ஆரும் பாலையா என் எஸ்
கிருஷ்ணனொடு பற்பலரே! பத்தொன்பது நூற்றினது
ஐம்பதுவரை இந்தியாவில் இருந்திட்டார்! பின்னரவர்
அமெரிக்கத் திரைத்துறைக்குச் சென்றிட்டார்! எ கைட் டு
அட்வென்சர் பெயர்நூல் சுயசரிதை வாயிலாக
அறிமுகமாம் கலைஞர்க்கு வழிகாட்டும் ஆசானாய்
மிளிர்ந்தாரே! அமெரிக்க இயக்குநராய் வாழ்விறுதி
கண்டபோது தொண்ணூற்று இரண்டுவயது அவருக்கே!
இரண்டாயிரத் தோராண்டு டிசம்பரதின் முதல்நாளில்
மறைந்திட்டார்! நூறாண்டு வாழவில்லை என்றாலும்
இன்றுமுளார்! என்றுமவர் நித்தியமாய் நீடிருப்பார்!
பதிநான்கு ஆண்டவர்தான் தமிழ்த்திரையில் புகழ்பெற்றார்!
இயக்கியவை பதின்மூன்று! சீர்மனைவி எலைன் டங்கன்!
அம்பிகாபதி இயக்கினாரே! அப்படந்தான் திரைதனிலே
ஓராண்டு தொடர்ந்ததுவே! மீராவை ஒருமுறையே
கண்டவர்கள் வாழ்நாளெலாம் மறவாரே! செய்திப்படம்
பலவற்றை தயாரித்தார்! அயல்நாட்டார் தமிழ்வளர்த்த
நேர்த்தியது தமிழர்களின் மகிழ்விற்கு மாவிருந்தே!



கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# நிமித்தங்கள்!

புரியாத புதிராகும் புவிமீது நம்வாழ்வு!
வரப்போகும் நிகழ்வுகளை யாரறிவார் இவ்வுலகில்?
வருவதை அறிவிக்கும் அறிகுறியாய் நிமித்தங்களை
வரையறுத்தார் அந்நாளில்! அவற்றுள் சிலகாண்போம்!
எதிர்பாராமல் நமைச்சுற்றி எழும்பிடும் ஒலிகளும்
முகமறியா மனிதர்கள் உதிர்த்திடும் வார்த்தைகளும்,
பல்லிகளின் சொல்லும்,பறவைகளின் ஒலியும்,
இயற்கை நிகழ்வுகளும், காணும் கனவுகளும்
வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு
காண்பிக்கும் நிமித்தங்களெனும் மனஉணர்வு அந்நாளில்!
இலக்கியங்களில் இதுகுறித்த செய்திகள் பலவுண்டு!
மறந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லையென
தொல்காப்பியம் நமக்கு சொல்லிடுதே பாடலொன்றில்!
பன்றியும் நிமித்தம் பார்த்ததாய்ப் பாடலுண்டு!
கட்டுப்பார்த்தல், கழங்கு பார்த்தல், கூடலிழைத்தல்
இவையெல்லாம் களவு வாழ்வில் நிமித்தங்கள்!
தனித்தோ, அணுக்கமான நபருடனோ கமுக்கமாக
நிமித்தம் கண்டறிவர் களவு வாழ்வினிலே!
ஊரறிய தாம் மேற்கொள்ளும் செயலனைத்தும்
நல்விதமாய் நிறைவேற வேண்டுமெனும் நோக்கோடு
கற்பு வாழ்வில் நிமித்தங்கள் பார்ப்பதுண்டு!
ஆந்தையின் ஒற்றைச்சொல் நன்றல்ல என்றுரைப்பர்!
காகம் கரைந்தால் விருந்தினர் வருகையென்பர்!
பெண்களின் இடது கண்துடித்தல் நல்லதென்பர்!
கனவு தோன்றும் காலமும், கனவில்நாம்
காணுகின்ற பொருட்களை, நிகழ்வுகளைச் சார்ந்தே
நன்மை, தீமையென பலன்சொல்வர் பெரியோர்கள்!
எண்ணியவை ஈடேற வில்லையெனில் புலவர்கள்
புள்ளையும் பொழுதையும் பழித்ததாய்ச் செய்யுளுண்டு!
செயற்கை நுண்ணறிவில் சேர்ந்திடுமோ நிமித்தங்கள்?



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# சிறுத்தொண்ட நாயனார் (பாகம் ஒன்று)

வீராதி வீரன் நரசிம்ம பல்லவனின் படைத் தலைவர்
சூராதி சூரன் "வெற்றி" மந்திரம் மட்டும் தெரிந்தவர்
தீராதி தீரன் வடநாட்டுப் போரில் வாதாபி வென்றார்
பார் போற்றும் அடியாரும் அவரே பரஞ்சோதியார்

மன்னன் மகிழ்ந்து பரஞ்சோதியாருக்கு விழா எடுத்தான்
பொன்னும் பொருளும் நிதி குவியல்களும் வழங்கினான்
தன்னடக்கத்துடன் மறுத்து அரசனை வணங்கி நின்றார்
என்னவென்று வினவ அறிந்தான், அவர் சிவத்தொண்டர்

தம் பெருமான் பெருமை அறியாது தவறிழைத்த பாவி
உம்மை சிவனடியார் என உணராமல் கெட்டு ஒழிந்தேன்
எம் பெருமான் தன்னை மன்னித்து அருளவேண்டும்.
விம்மிய நெஞ்சோடு அடியாரை ஊருக்கு அனுப்பினான்



தன்னுடைய ஊரான திருச்செங்காட்டங்குடி வந்தார்
தன் மனைவி திருவெண்காட்டு நங்கையுடன் வாழ்ந்தார்
இன் முகத்துடன் இருவரும் சிவத்தொண்டாற்றினர்
அன்றாடம் சிவனடியாருக்கு அமுது படைத்து வந்தனர்

நாளடைவில் பரஞ்சோதியார் சிறுத்தொண்டர் ஆனார்
சீராளத் தேவர் எனும் அழகு மைந்தன் அவதரித்தான்
கோளாறு இல்லாமல் வந்தாருக்கு வாரி வழங்கினார்
தாராளமான சேவைக்கு சந்தன நங்கையும் சேர்ந்தாள்

அடியாருக்கு தினம் அமுது படைத்து பின்தாம் உண்பார்
அடியார் யாரும் அன்று வரவில்லை மனம் கலங்கினார்
தேடித்தேடி தெருத் தெருவாக அலைந்து மனம் நொந்தார்
முடிவுக்கு கொண்டுவர இறைவன் திருவுள்ளம் கொண்டார்

பைரவர் தோற்றத்தில் ஈசன் சிறுத்தொண்டர் ஊர் வந்தார்
கையிலே சூலம் கழுத்தில் கபால மாலை கண்களில் தீ ஒளி
கை நிறைய பூசிய திருநீறு நெற்றியில் பளிச்சென மின்ன
மையிட்ட கண்கள் கருணையற்று வீட்டுக்கு முன் நின்றார்

வாசலில் அடியாரைக்கண்டு ஆனந்தமாக வந்தாள் மனைவி
வாருங்கள் உள்ளே உங்களைத் தேடித்தான் சென்றுள்ளார்
வாசமுடைய அமுது தயார் அமருங்கள் இதோ வந்துவிடுவார்
பாசமாக கூறினார் பெண் தனித்திருக்க வீட்டினுள் வருவதில்லை

யாம் கணபதி கோவில் திருவாச்சி மர நிழலில் இருப்போம்
ஆம், சிறுத்தொண்டர் வந்ததும் உடனே அனுப்பி வைக்கவும்
தாம் அறிக, ஆறு மாதத்திற்கு ஒரு முறை உணவருந்துவோம்
சாம்பசிவன் அறிவான் அமுதுண்ணும் அந்த நாள் இன்றுதான்

பசியோடு இருக்கும் அடியாரைக் கண்டார் சிறுத்தொண்டர்
ஈசன் பாதம் பணிகிறேன் வாருங்கள் வீட்டுக்குச் செல்லலாம்
"புசிக்க எமக்குத் தேவை ஐந்து வயதுடைய நர பசு சமையல்
யோசித்து சொல் உம்மால் முடியுமா?" முடியும் என்றார்.

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# வேல் விழியாலே

வேல்விழிகள் பாய்ச்சிய
வேகமான கணைகள்
நெஞ்சினில் தாக்குதே
நெருடலைக் கொடுக்குதே

ஆழமான காதலில்
ஆசைகள் கூடுதே
பாழமாய் இருந்து
பாசத்தை மூட்டுதே



பார்வைகள் பானத்தைப்
பருகிடக் கொடுக்குதே
வார்த்தைகள் காணாமல்
வசியம் பண்ணுதே

இதயத்தில் சிறைபட்டு
இன்பத்தை அடைகிறேன்
புதையலாய் தோண்ட
புதுவிதமாய் விளைந்தமையல்

விழிகள் தின்னும்
விசித்திர மோகமோ
வழிதேடிய யாசகனாய்
உனக்குள் நானே

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# கவிதைக்குவியல்

## என் இதயம்

என் கருப்பைமட்டுமல்ல
என் இதயம் கூட கருவுற்றிருக்கிறது
அவனை சுமப்பதனால்.

## மனம்

மாயாஜால அறை
உள்ளே சென்றவை
வாசலை தேடிக்கொண்டே இருக்கிறது
வெளியே வரத்தெரியாமல்.

## முரண்

மரக்கன்று நடும் விழாவினை
மந்திரியே துவங்கி வைத்தார்
மரங்களை வெட்டி மேடை அமைக்கப்படுகிறது
அவரை வரவேற்க.

## கடல்

சத்தம் மிகுந்த கரையினில்
சிப்பிகளையும்
அமைதியான ஆழ்கடலில்
முத்துக்களையும் அளிக்கும் அதிசய பொக்கிஷம்.



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி



அகர முதல

# முளரிக் குள மறுகரை

தண்ணீர் முளரிக் கரையின் தீரத்தில்
ஆலமர விழுதுகள் அடர்ந்திட்ட ஓரத்தில்
கட்டற்ற கிளிகளின் ராகத்தில் கானத்தில்
அந்திச் சூரியனின் தங்கநிற நேரத்தில்
குளித்துத் திரும்பும் ஈரஉடை நாணத்தில்
திளைத்து எழுதுகிறேன் காதல் ஈரத்தில்
உழைத்த தோள்களின் ஓய்வு பானத்தில்
பள்ளிச் சிறார்கள் வீடேகும் காலத்தில்
இதயம் உவக்கும் இயற்கையின் தானத்தில்
சூழ்நிலை சுகமென நிறுத்தும் மௌனத்தில்
சரசரக்கும் அரசமரம் ஆழும் தியானத்தில்
நிலையாமை காட்டும் மறுகரை தகனத்தில்



கவிஞர் ரவிஜி

# ஒற்றை விளக்கு

இரவின் அதிகாரத்துக்குள்
பூட்டிய வீட்டின்
முன்னே எரியும் அந்த ஒற்றை விளக்கு
நிலா மகளுக்கு ஒரு தோழியாயிருக்கலாம்
பகலில் தான் சாப்பிட்ட உணவு
செரிமானமாகாமல் தவிக்கும்
தாகமேடுக்கும் நாய்க்கு
தண்ணீர் அருந்த பயன்படலாம்
சுவரில் படரும் பல்லிக்கு
பூச்சிப் பிடிக்க உதவலாம்
ஊர்ந்து வரும் எறும்பின்
பாதைக்கு வெளிச்சமாகலாம்
தூரத்தில் இருந்து இரவு பணிச் செய்யும்
காவலாளிக்கு தினமும் கணக்கில்
வரும் மஞ்சள் புள்ளியில்
ஒன்றாய் இருக்கலாம்
விளக்கின் உதவியால் வந்த வெளிச்சம்
இரவின் இருளை கொஞ்சம்
நட்பாக்கியிருக்கலாம்
விளக்கின் ஒளியை வைத்து
மரங்கள் தன்னை நிழற்படம்
எடுத்து ரசித்திருக்கலாம்
எப்படியோ
இதில் ஏதோ ஒன்றையாவது
மனதில் வைத்து
நெடுநாள் எரியாமலிருக்கும்
தெரு விளக்கை எரியவைத்தால்
அந்த காலனிக் குழந்தைகள்
இரவுப் பாடம் படிக்கக்
கொஞ்சம் உதவியாயிருக்கும்.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# விதவை

ஒரு பெண்ணின் திருமணம்
நடைப் பெறுவது
மகிழ்ச்சி தரும்
ஒரு பெண்ணின் விதவை
கோலம் என்பது சந்தோசத்தை தராது

ஒரு பெண்ணின் விதவை என்ற
பட்டம் கொடுத்து எந்த
நிகழ்ச்சிக்கும் போக
விடாமல் ஒதுக்கி வைப்பது
இன்னொரு பெண்ணாகத்தான்
இருப்பாள்



ஆனால்,

எப்போதும் ஒரு ஆணாக இருக்காது
விதவை என்ற கோலத்தை
தூக்கி எறிய வேண்டும்
அவளும் ஒரு பெண் தான்
என்பது நாம் நினைத்துப்
பார்க்க வேண்டும்.

அவளும் காலங்களை கடந்து போக வேண்டும்
பல நிகழ்வுகளை அவள்
எதிர் கொள்ள வேண்டும்
பெண்ணே நீ ஒரு பூ திரை

மீண்டும் நீ பூக்களால்
உன் வாழ்க்கை மலரட்டும்
விதவை எனும் பெயரை வைத்தார்களே
அவர்கள் முன் வாழ்ந்து
காட்ட வேண்டும்.

நீ விதவை தூக்கி எறிந்து விட்டு
மறுமணம் எனும் மணக்கோலத்தில்
மணப் பெண்ணாக மாறி விடு.


நீ சமுதாயத்தை பற்றி
கவலை படாதே பெண்ணே
குறைகள் இருந்தாலும்
நீ குறிக்கோளுடன் நடந்து வா.
நாளை பூக்கும் பூக்கள்
பூங்கொத்தாக மாறி விடும்.

கவிஞர் தமிழருவி ஏ.கோபி,நத்தம்

# சிவம் சார்

ஏணிப்படிகளில் மாந்தர்கள் தந்த சிவனே !
ஏனிப்படி மாற்ற வந்தாய் சிவனே ?
என்நிலை மாற்றியே  தன்னிலை தாழ்த்தியே
என்னிலே வந்திடுவாய் சிவனே!

அருந்தவம் கொண்டே அமைதியாய் நின்றே
பெரும்பாவி என்னை பிரியாத வெண்மலரே!
உன்பாதம் பற்ற உல(கு)துன்பம் அண்டாதே
நின்னை ஒருகணம் நினை!




கவிஞர் மோ.நிவேதா,குறிஞ்சிக்குடி

# கொத்தமங்கலம் சுப்பு

(கட்டுரை)

**10 நவம்பர் 1910 - 15 பெப்ரவரி 1974**

## அறிமுகம்



கொத்தமங்கலம் சுப்பு (10 நவம்பர் 1910 - 15 பெப்ரவரி 1974) என்பவர் கவிஞர், பாடலாசிரியர், எழுத்தாளர், நடிகர், திரைப்பட இயக்குநர், கதை வசனகர்த்தா, வில்லுப்பாட்டிசைக் கலைஞர் என்று மட்டுமல்லாது பத்திரிக்கையாளர், துணைஆசிரியர், நாடகநடிகர் என்று பன்முகங்கள் கொண்ட அறிஞராக அறியப்பட்டார். மிகப் பிரபலமான தில்லானா மோகனாம்பாள் தொடர்கதையை ஆனந்த விகடனில் கலைமணி என்ற புனைபெயரில் எழுதியவர். பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

## ஆரம்ப காலம்

கொத்தமங்கலம் சுப்புவின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் என்ற சிறுநகர்க்கு அருகே அமைந்துள்ள கண்ணரியேந்தல் என்னும் சிற்றூரில் மகாலிங்கம் ஐயருக்கும், கங்கம்மாளுக்கும் 10 நவம்பர் 1910 ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலேயே தாயை இழந்த சுப்பு, சிற்றன்னையின் பராமரிப்பில் வளர்ந்தார். 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்றார். சொந்தத்திலேயே மீனாட்சி என்ற பெண்ணைத் திருமணம் (பிற்காலத்தில் பிரபலமான நடிகை சுந்தரிபாயைத் திருமணம் செய்தார்.) செய்துகொண்ட சுப்பு காரைக்குடி அருகே உள்ளகொத்தமங்கலம் என்ற ஊருக்குக் குடிபெயர்ந்து, அங்கே வணிக நிறுவனம் ஒன்றில் எழுத்தராகப் பணியாற்றினார். ஆனாலும், அவரது ஆர்வம் நாடகங்களிலும், நடிப்பிலும், பாடல்களிலும் இருந்தது. கவிதைகள் இயற்ற ஆரம்பித்தார். 3,500 பாடல்களில் காந்திமகான் கதையை எழுதினார்.பல நாட்டுப் பாடல்களை இயற்றியிருக்கிறார். 1930களின் இறுதியில் தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு இயக்குனர் கே. சுப்பிரமணியம் மூலம் கிட்டியது.

# கொத்தமங்கலம் சுப்பு

(கட்டுரை)

## திரையுலகப் பணி




கொத்தமங்கலம் சுப்பு முதன் முதலில் 1935 ஆம் ஆண்டில் கே. சுப்பிரமணியம் இயக்கிய பட்டினத்தார் திரைப்படத்தில் நடித்தார். 1936 இல் சந்திரமோகனா என்ற திரைப்படத்தில் நடிகர் எம். கே. ராதாவின் நண்பனாக நடித்தார். அதன் பின்னர் 1937 இல் மைனர் ராஜாமணி, தொடர்ந்து அனாதைப் பெண், அதிர்ஷ்டம், திருநீலகண்டர், சாந்த சக்குபாய், அடங்காப்பிடாரி, கச்ச தேவயானி, மதனகாமராஜன் போன்ற திரைப்படங்களில் நடித்தார்.

1944 ஆம் ஆண்டில் வெளிவந்த ஜெமினியின் தாசி அபரஞ்சி இவர் நடித்த ஒரு வெற்றிப் படம் ஆகும். 1945 ஆம் ஆண்டில் கண்ணம்மா என் காதலி படத்தை இயக்கினார். இதன் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் அனைத்தையும் சுப்புவே எழுதியிருந்தார். இப்படத்தில் மனைவி சுந்தரிபாய் கதாநாயகியாக நடித்திருந்தார். 1947 இல் மிஸ் மாலினி திரைப்படத்தை இயக்கி, அதில் தானே கதாநாயகனாக நடித்தார். இத்திரைப்படம் பின்னர் மிஸ்டர் சம்பத் என்ற பெயரில் இந்தியில் வெளிவந்தது. 1953 ஆம் ஆண்டில் அவ்வையார் என்ற பிரபலமான திரைப்படத்தை இயக்கினார். கே. பி. சுந்தராம்பாள் போன்ற அன்றைய பிரபலமான நடிகர்கள் இதில் நடித்தனர். இத்திரைப்படத்தில் மனைவி சுந்தரிபாயுடன் சிறு வேடம் ஒன்றில் சுப்பு நடித்தார்.

## நடித்த திரைப்படங்கள்

பட்டினத்தார் (1935)
நவீன சாரங்கதரா (1935)
சந்திரமோகனா (1936)
மைனர் ராஜாமணி (1937)
அனாதைப் பெண் (1938)

# கொத்தமங்கலம் சுப்பு

(கட்டுரை)

## நடித்த திரைப்படங்கள்

அதிர்ஷ்டம் (1939)
திருநீலகண்டர் (1939)
சாந்த சக்குபாய் (1939)
பக்த சேதா (1940)
சூர்யபுத்ரி (1941)
அடங்காப்பிடாரி (1939)
கச்ச தேவயானி (1941)
மதனகாமராஜன் (1941)
தாசி அபரஞ்சி (1944)
மிஸ் மாலினி (1947)

## இயக்கிய திரைப்படங்கள்

கண்ணம்மா என் காதலி (1945)
மிஸ் மாலினி (1947)
அவ்வையார் (1953)






## படைப்புகள்

தில்லானா மோகனாம்பாள் (புதினம்)
பந்தநல்லூர் பாமா (புதினம்)
பொன்னி வனத்துப் பூங்குயில் (வரலாற்றுப் புதினம்)
ராவ் பஹதூர் சிங்காரம் (புதினம்)
மஞ்சி விரட்டு (கவிதைத் தொகுப்பு)
150 சிறுகதைகள், 100க்கு மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார்.

## விருதுகள்

பத்மஸ்ரீ விருது (1971)
கலாசிகாமணி (1967)

## இறப்பு

திரைத்துறையில் பல்முனை வித்தகராக விளங்கிய கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் 15.02.1974 இல் இயற்கையெய்தினார்.

கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
எத்தனை கைகள் உன்னை
கை விட்டாலும் உன் நம்பிக்கை
உன்னை கை விடாது..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

**அகமும் தமிழே!** **முதலும் தமிழே!!**

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**

**தொடர்பிற்கு:**
**9597887847/8870884969**

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com